விழுப்புரம் நகராட்சி

2021–ஆம் ஆண்டு ஜூலை மாதம் **30–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.25 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற **"சாதாரண கூட்ட"** நடவடிக்கைகள்.

முன்னிலை:– **போ.வி.சுரேந்திர ஷா, எம்.ஏ.,**
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,

மன்றப்பொருள்

1. இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோரது ஜூன் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

பதிவு செய்யலாம். (/ /சி1)

2. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலைய கடைகளை குத்தகை உரிமம் பெற்ற கீழ்கண்ட குத்தகைதாரர், கொரோனா நோய் தொற்று கரணமாக பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்ட 24.03.2020 முதல் 06.09.2020 வரை காலத்திற்க்கு குத்தகை வாடகை தொகையினை தள்ளுபடி செய்யக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No:6882/2021 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தி தருமாறு வழக்கறிஞர் திரு. பி.ஸ்ரீநிவாஸ் அவர்களிடம் ஒப்படைத்தமைக்கும், வழக்கு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்	கடை எண்.	குத்தகைதாரர் பெயர்
1.	56	திரு.எஸ்.பி.சுந்தரம்
2.	27	திரு.கே.சீனுவாசன் த/பெ. குப்புசாமி
3.	29, 30	திரு.என்.ஏழுமலை த/பெ. நடேசன்
4.	52	திரு.ஜாகீர் உசேன் த/பெ. முகமது யூசுப்
5.	55	திரு.சி.ஆர்.சங்கர் த/பெ. ராஜகோபால்
6.	19	திரு.கே.மணிவண்ணன் த/பெ. குப்புசாமி
7.	78	திரு.கே.நடணசிகாமணி த/பெ. கந்தசாமி
8.	64	திரு.ஜி.முரளி த/பெ. கோபால்
9.	28	திருமதி.அமுதவள்ளி க/பெ. தனசேகர்
10.	38	திரு.எஸ்.கண்ணன் த/பெ. செல்வராஜ்
11.	13	திரு.எஸ்.பாண்டுரங்கன் த/பெ. சாரங்கபாணி
12.	34	திரு.வி.சக்கரபாணி த/பெ. பலராமன்
13.	02	திரு.வி.யேசுராஜ் த/பெ. பீட்டர்

அலுவலக குறிப்பு:-

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) வழக்கின் அவசர அவசியம் கருதி வழக்கினை திரு.பி.ஸ்ரீநிவாஸ் வழக்கறிஞர் அவர்களிடம் ஒப்படைத்தமைக்கும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/- வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1362/2021/அ1)

3. வேலூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7301/2012/சி1, நாள்.12.12.2020 மற்றும் 28.06.2021-ன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிக்கு தேவையான HP Keboard with HP Mouse 10 எண்ணிக்கை மற்றும் K7 Antivirus Total Security மென்பொருள் 15 எண்ணிக்கை வழங்க தெரிவிக்கப்பட்டது.

எனவே மேற்காணும் HP Keboard with HP Mouse 10 எண்ணிக்கை மற்றும் K7 Antivirus Total Security மென்பொருள் 15 எண்ணிக்கை விநியோகம் செய்ய உத்தேச செலவினம் ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(4750/2021/டி3)

4. இந்நகராட்சிக்கு சொந்தமான எம்.ஜே.ரோட்டில் உள்ள மீன் நாளங்காடி கட்டண கழிவறை புதுப்பிக்கப்பட்டு ஏலம் போகாத நிலையில் துறைமுலம் வசூலிக்க தேவையான ரசீது புத்தகங்கள் அச்சடித்து வழங்குவதற்கு நகர் மன்ற தீர்மான எண்.2608 நாள்.31.05.2021-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ள அரசு சார்புடைய நிறுவனமான விழுப்புரம் மாவட்ட அச்சகம் மற்றும் எழுதுபொருள் கூட்டுறவு சங்கம் லிட்., விழுப்புரம். நிறுவனத்திடம் ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தில் தேவைக்கேற்ப அச்சடித்து வழங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/-ஐ (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1, மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி ரசிது புத்தகம் அச்சடித்ததற்கும் மற்றும் வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(10221/2019/அ1)

5. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள 1.புதிய பேருந்து நிலையத்தில் தென்மேற்கில் உள்ள கட்டண கழிவறை மற்றும் 2.புதிய பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கான நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2021-2022-ஆம் ஆண்டிற்கு ஏலம் போகாத நிலையில் துறை மூலம் வசூலிக்கப்பட வருகின்றது அதற்கு தேவையான 50000 எண்ணிக்கையில் இரசீகள் சட்டமன்ற தேர்தல் 2021 நன்நடத்தை விதிமுறை அமுலில் உள்ளதால் விலைப்புள்ளி கோர இயலாத நிலையில் அரசு சார்புடைய நிறுவனமான விழுப்புரம் மாவட்ட அச்சகம் மற்றும் எழுதுபொருள் கூட்டுறவு சங்கம் லிட்., விழுப்புரம். நிறுவனத்திடம் அச்சடிக்க தனிஅலுவலர் அவர்களின் மூன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது அதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.2608 நாள்.31.05.2021-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போழுது ரசீது புத்தகங்க முடிவடைய உள்ளதால் தேவையான ரசீது புத்தகங்கள் மேற்காணும் நிறுவனத்திடமிருந்து ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தில் தேவைக்கேற்ப அச்சடித்து வழங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/-ஐ (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்

(10221/2019/அ1)

6. விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 வழுதரெட்டி பாளையம் பகுதி பஞ்சாயத்து பகுதியாக இருந்த போது 40 வருடங்களுக்கு முன்பு 90 அடி ஆழத்தில் போடப்பட்ட ஆழ்துளை குழாய் கிணற்றின் மின்மோட்டார் பழுது ஏற்பட்டும், மண் சரிந்தும் நீரின்றி பயனற்ற நிலையில் உள்ளதால், இப்பகுதி பொதுமக்கள் குடிநீர் இல்லாமல் புகார் அளித்து வருவதை தவிர்க்கும் விதமாகவும், பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் விதமாகவும், மேற்கண்ட பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய பவர் பம்பு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.10 இலட்சத்திற்கு அனுமதியும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4858/2021/இ2)

7. விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 42 வரையிலான பகுதிகளில் உள்ள ஆழ்துளை குழாய் கிணற்றின் (1HP மற்றும் 2HP) மின்மோட்டார் மற்றும் Panel Board–களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.70 இலட்சத்திற்கு அனுமதியும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4837/2021/இ2)

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
விழுப்புரம் நகராட்சி